# மெட்ரோ ரயில்சேவை நேரம் நீட்டிப்பு



சென்னை, ஜூலை 7: சென்னை மெட்ரோ ரயில் சேவை நேரம் வியாழக்கிழமை (ஜூலை 8) முதல் நீட்டிக்கப்படவுள்ளது. அதாவது, காலை 6.30 மணிக்கு பதிலாக, காலை 5.30 மணிக்கு மெட்ரோ ரயில் சேவை தொடங்கி, இரவு 9 மணி வரை இயக்கப்படவுள்ளது. இதுதவிர, நெரிசல் மிகுந்த நேரங்களில் (பீக் அவர்ஸ்) காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் தலா ஒரு மணி நேரம் நீட்டிக்கப்பட்டு, 5 நிமிஷ இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். மற்ற நேரங்களில் (நெரிசல் இல்லா நேரங்களில்) 10 நிமிஷ இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

பயணிகளின் கோரிக்கையை ஏற்று, இவ்வாறு மெட்ரோ ரயில் இயக்கத்துக்கான நேரம் மாற்றப்பட்டுள்ளது.

அதே நேரம், கரோனா நோய்த்தொற்று பரவாமல் தடுப்பதற்காக, மெட்ரோ ரயில் நிலைய வளாகம், மெட்ரோ ரயில்களின் உள்ளே முன்னெச்சரிக்கை நடவடிக்கை தீவிரமாகக் கடைப்பிடிக்கப்படுவதாகவும், ஜூன் 21-ஆம் தேதி முதல் ஜூலை 6-ஆம் தேதி வரை, முகக்கவசம் அணியாத 34 பயணிகளிடமிருந்து அபராதமாக ரூ.6,800 வசூலிக்கப்பட்டுள்ளதாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.